1970 மார்ச் 31]

[ஈ] மாநிலங்கள் அவைத் தேர்தலில் இரண்டு வாக்குகள் செல்லா தவையாக ஆனது குறித்து.

திரு. டி.மார்டின்: சார், விதி 83-இன் கீழ், பாயின்ட் ஆப் ஆர்டர். கண்ணிய மிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். கண்ணியம் மிக்க பேரவைத்தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறோம். ராஜ்ய சபாத் தேர்தலில் 2 வோட்டுக்கள் செல்லாத வோட்டுக்களாக ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கொண்டு வருகிற ஒழுங்குப் பிரச்சினை ராஜ்ய சபாத் தேர்தலைப் பற்றியது....

திரு. டி. மார்டின் : Sir, you allow me to speak and I will come to the context....

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணியமான இந்தச் சபையில் நாமெல்லாம் உறுப்பினர்கள். இரண்டு ஓட்டுக்கள் செல்லாத ஓட்டுக்களாகிவிட்டன, இதைப் பற்றி மக்கள் ஓட்டுப் போடுவதற்குக் கூடத் தெரியாத நிலைமையிலே இரண்டு ஓட்டுக்கள் ஆகிவிட்டன என்று பொது மக்கள் பேசக்கூடிய நிலைமையிலே இந்தச் சபையினுடைய கௌரவத் தைப் பாதிக்கக்கூடிய செயல் நடைபெற்று இருப்பதால் தாங்கள் அதைப் பற்றி விசாரணை நடத்தி இரண்டு ஓட்டுக்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ரூல் 83-இல் எப்படி வரும் என்பதைக் கொஞ்சம் சொல்கிறீர்களா?

THIRU T. MARTIN : Yes. The proviso to Rule 83 states—

Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order. . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் 83-வது விதியைப் படிக் கிறீர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலே உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்பதைப் பற்றி அதிலே இருக்கிறது. இந்த அவையிலே இப்பொழுது எப்படி ஒழுங்கு மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமென்றுதான் கேட்டேன். மன்றத்திலே சில விதிமுறைகள் இருக்கின்றன, எந்த வகையிலே அவை மீறப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லவேண்டுமேயொழிய ரூல் 83-ஐ சொல்கிறீர்கள், அந்த ரூல் எல்லா வற்றிற்கும் பொது. எந்த உறுப்பினரும் 83-வது விதியின் கீழ்தான் ஒழுங்குப் பிரச்னை கொண்டுவர வேண்டும்.

திரு. நா. வீராசாமி : 20 நிமிடங்களாக இந்த மன்றத்திற்குச் சம்பந் தப்படாதவை விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் குறிப்பேடு களில் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பேடுகளில்.........................

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இம்மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

7. அவையுரிமைக் கேள்வி

அவையின் முடிவிற்குக் காத்திருக்கும் ஒரு பொருள் குறித்து, முன்னறிவிப்பின்றி அவையுரிமைக் கேள்வி எழுப்ப அனுமதி கோரல்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I raise on a matter of privilege. This is a matter pending before the House.

MR. DEPUTY SPEAKER : Even then you have to give me notice for bringing a privilege motion.

THIRU K. RAMAMOORTHY : No. Sir, it pertains to a matter pending before the House. The proviso to Rule 184 says—

Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice.

MR. DEPUTY SPEAKER : So it is a power vested in the Speaker and not the Hon. Member. Under the proviso to Rule 184, the Speaker has the power to waive such notice and not any Hon. Member.

THIRU K. RAMAMOORTHY : I have to make it known to the Hon. Speaker. Only then the Speaker can define whether he could waive notice or not, since it pertains to a matter pending before the House.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதியிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவையெல்லாம் இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டு அரசியலமைப்புச் சட்டமெல்லாம் இழுக்கப்பட்டு திருத்தப்பட்டு இருக்கின்றன ரிட்டன் நோட்டிஸ் முன்னாலே கொடுக்காமல் இருப்பதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிக்கிணங்கக் கூடத் தலைவர் அவர்களின் அனுமதியிருந்தால்தான் அப்படி எழுப்பலாம். தலைவர் அவர்களின் அனுமதியில்லாவிட்டால் எழுப்ப முடியாது.

THIRU K. RAMAMOORTHY : I may bring it to the notice of the Hon. Speaker. It is for the Hon. Speaker . . .

MR. DEPUTY SPEAKER : I have already told that you must give me notice, even if you want to bring a privilege motion under Rule 184.

THIRU K. RAMAMOORTHY : You must hear me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொண்டு வருவதற்கு நான் அனுமதி தரவில்லை. நீங்கள் மறுபடியும் எழுந்திருப்பது சரியல்ல. அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.